

இல்லந்தோறும் சென்று தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான 5 ஆண்டு கால "திராவிட மாடல்" ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து, சிறப்பாக தேர்தல் பணிகள் மேற்கொள்வது குறித்து திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழக பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது.



கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் மத்திய பகுதி கழக செயல்வீரர்கள் கூட்டம் கரூர் டி.வி. சரஸ்வதி மகாலில் நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், பூத்(மண்டல) பொறுப்பாளர்கள், பூத் கமிட்டி நிர்வாகிகள், மாவட்டம், பகுதி, வார்டு சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.

# குடிநீர் - கழிவுநீரகற்று வரி, கட்டணங்களை மார்ச் 31ஆம் தேதிக்குள் செலுத்திடுக!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 29-

சென்னை குடிநீர் வாரியத்திற்கு பொதுமக்கள் செலுத்த வேண்டிய குடிநீர் / கழிவுநீரகற்று வரி, கட்டணங்கள் மற்றும் நிலுவை தொகையினை மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள் செலுத்திட வேண்டும்.

வரி செலுத்துவதற்கு ஏதுவாக அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் இயங்கும் வசூல் மையங்கள் அரசு விடுமுறை நாட்களான சனிக்கிழமை (28.3.2026), ஞாயிற்றுக்கிழமை (29.3.2026) மற்றும் செவ்வாய்கிழமை (31.3.2026) அன்றும் இயங்கும்.

மேலும், நுகர்வோர்கள் https://bnc.chennaimetrowater.in/#/public/cuslogin என்ற வலைதளத்தைப் பயன்படுத்தி கிரெடிட் கார்டு (Credit Card), டெபிட் கார்டு (Debit Card) மற்றும் நெட் பேங்கிங் (Net Banking) மூலமாக செலுத்தலாம். இசேவை மையங்கள், UPI, வசூல் மையங்களில் உள்ள QR குறியீடு மற்றும் iPoS போன்ற பிற கட்டண முறைகளையும் பயன்படுத்தி நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் / கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்களை செலுத்தலாம்.

எனவே, நுகர்வோர்கள் 31.03.2026 க்குள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்களை உரிய நேரத்தில் செலுத்தி மேல்வரியைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தெரிவித்துள்ளது.

### மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் – வாக்கு சரிபார்க்கும் இயந்திரங்கள்

# சட்டமன்றத் தொகுதி வாரியாக அனுப்பும் பணி!

## மாவட்ட தேர்தல் அலுவலர் ஜெ.குமரகுருபரன் பார்வையிட்டார்!

சென்னை, மார்ச் 29-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல், 2026-னை முன்னிட்டு, சென்னை சிந்தாதரிப்பேட்டையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேமிப்புக் கிடங்கில் கணினி குலுக்கல் முறையில் சுழற்சிக்கு முதல் சமவாய்ப்பிற்கு உட்படுத்தப்பட்ட (Randomization) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்காளர்கள் தாம் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்கள் ஆகியவை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் சட்டமன்றத் தொகுதி வாரியாக அனுப்பப்படும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நேற்று (27.03.2026) பார்வையிட்டார்.



பின்னர் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சென்னை சிந்தாதிரிப்பேட்டை சேமிப்புக் கிடங்கில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள் ஆகியவற்றை எந்த சட்டமன்றத் தொகுதிக்கு எந்த இயந்திரங்கள் என்பது கணினி குலுக்கல் சுழற்சி முறையில் முதல் சமவாய்ப்பிற்கு உட்படுத்தப்பட்டு வரிசைப்படுத்தப்பட்டு, அதன் விவரங்கள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள் மற்றும் வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்கள் ஆகியவற்றை சைதாப்பேட்டை, தியாகராய நகர், மயிலாப்பூர், வேளச்சேரி, ஆர்.கே.நகர், பெரம்பூர், வில்லிவாக்கம், எழும்பூர் ஆகிய 8 சட்டமன்றத் தொகுதிகளுக்கு தேவையான இயந்திரங்கள் மற்றும் கூடுதலாக 20% மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் கட்டுப்பாட்டுக் கருவிகளும், 30% வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கணினி குலுக்கல் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கைபேசி செயலி மூலமாக ஸ்கேன் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு தொடர்புடைய சட்டமன்றத் தொகுதிகளுக்கு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அனுப்பப்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக இன்று மட்டும் 8 சட்டமன்றத் தொகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 8 சட்டமன்றத் தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஞாயிற்றுக்கிழமை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொண்டு செல்லப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேர்தல் நடத்தும் அலுவலர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பாதுகாப்பு அறையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மூடி சீல் வைக்கப்படும். மேலும், 19,500 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு நாளை பயிற்சி வழங்கப்படும்.

**கேள்வி: சென்னையில் கூடுதலாக எவ்வளவு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்கள் இருக்கிறது? பழுது ஏற்படும் நிலையில் எவ்வளவு இயந்திரம் கையிருப்பில் உள்ளன?**

டிசம்பர் மாதம் மூன்று வாரத்திலிருந்து ஜனவரி முதல் வாரம் வரை இந்த இயந்திரங்களில் முதல்நிலை சரிபார்க்கும் பணி பெல்ஸ் பொறியாளர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு, சரிபார்க்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மட்டும் சட்டமன்றத் தொகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. 20% மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், 30% வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்களும் கூடுதலாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. போதுமான இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளன.

**கேள்வி: சென்னையில் அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர தனியார் இடங்களில், நட்சத்திர விடுதிகள், ஹோட்டல்ல அரசியல் நிகழ்ச்சி நடத்துறதுக்கு அனுமதி இருக்கா? இல்ல அதுக்கு அனுமதி வாங்குறதுக்கு வழிமுறை இருக்கா?**

நட்சத்திர விடுதிகள் மற்றும் ஹோட்டல்களில் பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தடையில்லை. தேர்தல் தொடர்பான கூட்டங்கள் மற்றும் அரசியல் கட்சி தேர்தல் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு அனுமதியில்லை. அரசியல் கட்சிகள் கூட்டங்கள் நடத்துவதற்கு காவல்துறையினரால் வரையறுக்கப்பட்டுள்ள பொது இடங்களில் மட்டும் Suvidha செயலி மூலம் 48 மணி நேரத்திற்கு முன்னதாக விண்ணப்பித்து அனுமதி பெறலாம்.

**கேள்வி: தமிழக வெற்றிக் கழகத் தலைவருக்கு அனுமதி கேட்டுருக்காங்க, அது வழங்கப்பட்டிருக்கா? என்ன பண்ணிருக்காங்க?**

தேர்தல் நடத்தை விதிகளின்படி, எந்த கட்சிகள் மற்றும் தனிநபர்கள் தேர்தல் தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்திட Suvidha செயலி மூலம் 48 மணி நேரத்திற்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும். மேலும், தொடர்புடைய கட்சிகள் சார்பாக மேடை அமைத்தல் மற்றும் பிரம்மாண்டமாக நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு பொதுப்பணித்துறையின் அனுமதி மற்றும் பொதுமக்களுக்கு எந்தவித தொந்தரவும் இல்லாத வகையில் காவல்துறையின் தடையின்மைச் சான்றும் பெற வேண்டும்.

நிறைய விண்ணப்பங்கள் அனுமதி கேட்டு வந்துள்ளன. அவற்றிற்கு அனுமதி வழங்கி வருகிறோம். காவல்துறை அனுமதிக்கப்பட்ட இடங்கள் தவிர்த்து மற்ற இடங்களில் அனுமதி கேட்டால் அவை நிராகரிக்கப்படுகிறது. நிராகரிக்கப்படுவதற்கான காரணங்களும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**கேள்வி: அனுமதி வழங்குவதற்கு தேர்தல் நடத்தும் அலுவலரே முடிவெடுப்பாரா?**

தேர்தல் நடத்தும் அலுவலர் தான் அனுமதி கொடுக்க வேண்டும். தேர்தல் தொடங்கியவுடன் அனுமதி வழங்குவது முழுவதும் தேர்தல் நடத்தும் அலுவலரைச் சார்ந்தது. தொடர்புடைய துறைகள் தடையின்மைச் சான்று வழங்கிய உடனேயே தேர்தல் நடத்தும் அலுவலர் அனுமதி வழங்கிடுவார். தடையின்மைச் சான்று வழங்குவதற்கு காலதாமதமானால் மாவட்ட தேர்தல் அலுவலரை சம்பந்தப்பட்ட கட்சியினர் தொடர்பு கொள்ளலாம். அனுமதி பெறுவதற்கு விண்ணப்பித்த விண்ணப்பங்கள் அனைத்தும் சரியாக இருந்தால் மூன்று அல்லது நான்கு மணி நேரங்களில் கூட அனுமதியளித்துள்ளோம். Suvidha செயலியில் மூலமாகவே அனுமதி பெற வேண்டும்.

**கேள்வி: நட்சத்திர வேட்பாளர்கள், விஜய் மாதிரி நடிகர்கள் வேட்பாளர்களா உள்ளவர்களுக்கு தேர்தல் பிரச்சாரத்தின் போது கூடுதல் பாதுகாப்பு இருக்குமா? ஏன்னா ஏற்கனவே பல அசாம்பாவிதங்கள் நடந்திருக்கு...**

இதுபோன்ற நட்சத்திர வேட்பாளர்கள் பிரசாரத்திற்கு காவல்துறையினர் போதுமான காவல்துறையினரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தி பொதுமக்களுக்கு இடையூறு இல்லாதவகையில் பாதுகாப்பினை வழங்குவார்கள் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கூடுதல் மாவட்ட தேர்தல்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க.கற்பகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள் விஜய்பாபு, திருமதி நா. பூஷ்ணாதேவி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பா.ஜ.க.வின் நன்கொடை வசூல்!

புதுடெல்லி, மார்ச் 29 -

ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தபிறகு, அக்கட்சி நன்கொடை பெறுவது தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

2024 - 2025 நிதியாண்டில் மட்டும் பா.ஜ.க. 6 ஆயிரத்து 74 கோடி ரூபாய் நன்கொடை பெற்றுள்ளது தெரியவந்துள்ளது.

ஜனநாயகச் சீர்திருத்தங்களுக்கான அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், 2024 - 2025 நிதியாண்டில் அரசியல் கட்சிகளின் நன்கொடை குறித்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, 2024 - 2025 நிதியாண்டில் காங்கிரஸ், ஆம் ஆத்மி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட தேசிய கட்சிகளின் மொத்த நன்கொடையைவிட, பா.ஜ.க. பெற்றுள்ள நன்கொடை சுமார் 10 மடங்கு அதிகமாகும்.

மேலும், 2023 - 2024 நிதியாண்டில் பா.ஜ.க. பெற்ற 2 ஆயிரத்து 243 கோடி ரூபாயைவிட இது சுமார் 171 சதவிகிதம் அதிகம்.

2024 - 2025 நிதியாண்டில் தேசிய கட்சிகள் 6 ஆயிரத்து 648 கோடியே 563 லட்சம் ரூபாய் நன்கொடையாகப் பெற்றுள்ளன.

இதில், பா.ஜ.க. மட்டும் மொத்தம் 6ஆயிரத்து 74 கோடி ரூபாயும், காங்கிரஸ், 517 கோடி ரூபாயும் பெற்றுள்ளன.

### பறிமுதல் செய்ததைத் திரும்பப் பெற

# மாவட்டம் தோறும் குறை தீர்ப்புக் குழுக்கள் அமைப்பு!

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 29 -

பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுக்களால் பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் இதர பொருட்களை உரிய ஆவணங்களை சமர்ப்பித்து, திரும்பப் பெற்றுக் கொள்ள மாவட்டந்தோறும் குறை தீர்ப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் பறிமுதல்கள் தொடர்பான குறைகளுக்கு இக்குழுக்களை அணுகி தீர்வு பெற்றுக்கொள்ளலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மாவட்டம்தோறும் அமைக்கப்பட்டுள்ள இக்குழுக்களின் தொடர்பு எண்கள் :

★ திருவள்ளூர் - 7373704202

★ சென்னை - 9551055182

★ காஞ்சிபுரம் - 9442745251

இதேபோல் அனைத்து மாவட்டங்களுக்கும் தொடர்பு எண்கள் வழங்கப்பட்டுள்ளன.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாநகராட்சி, தியாகி திருப்பூர் குமரன் பேருந்து நிலையம் அருகில் உள்ள உழவர் சந்தையில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து காய்கறிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதை பார்வையிட்டு வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, இணை இயக்குனர் (வேளாண்மை) எம்.ஆதிசாமி, துணை இயக்குனர் (வேளாண் விற்பனை வணிகம்) எஸ்.சண்முகசுந்தரம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு.சதிஸ்குமார், வேளாண் விற்பனை சங்க செயலாளர் எஸ்.வெங்கடாசலம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பி.மீனாம்பிகை ஆகியோர் உள்ளனர்.

### பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட

# நாடாளுமன்ற, சட்டமன்ற பா.ஜ.க. உறுப்பினர்கள் 44 பேருக்கு அக்கட்சி பாதுகாப்பு!

## காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச் 29 -

தேசிய மகளிர் காங்கிரஸ் தலைவர் அல்கா லம்பா டெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது, பா.ஜ.க.வைச் சேர்ந்த 44 நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மீது, மிகத் தீவிரமான பாலியல் வன்கொடுமை மற்றும் பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகள் உள்ளதாக தெரிவித்தார்.

பாலியல் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அவர்களை பா.ஜ.க. பாதுகாத்து வருகிறது என்று கடுமையாக விமர்சித்த அவர்,

கோவாவில் பா.ஜ.க. கவுன்சிலரின் மகன், 3 ஆண்டுகளில் 20 முதல் 30 சிறுமிகளை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய வழக்கை சுட்டிக் காட்டினார்.

அதேபோல் மகாராஷ்டிராவில் தன்னைத் தானே கடவுள் என கூறி க்கொள்ளும் அசோக் காரத் 58 பெண்களை பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம், அரியானா, ஹிமாச்சாலப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பா.ஜ.க.வினர் மீதான பாலியல் குற்றச்சாட்டுகளை தேசிய மகளிர் காங்கிரஸ் தலைவர் அல்கா லம்பா பட்டியலிட்டார்.

பா.ஜ.க. எம்.பி. பிரிஜ் பூஷண் சிங் மீதான மல்யுத்த வீராங்கனைகளின் பாலியல் குற்றச்சாட்டு, உன்னாவ் பாலியல் வன்கொடுமை வழக்குகளை சுட்டிக்காட்டிய அவர், பிரதமர் மோடி மீது பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறிய குற்றம்சாட்டிகளையும் குறிப்பிட்டார்.

மேலும், ஒன்றிய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரிக்கும் எப்ஸ்டீன் கோப்புகளுக்கும் இடையிலான தொடர்பு குறித்து நாடாளுமன்றத்தில் விரிவான விவாதம் நடத்தப்படவில்லை என்றும் பாலியல் குற்றங்களில் தொடர் புடைய நபர்களை பா.ஜ.க. பாதுகாப்பதாகவும் அல்கா லம்பா குற்றம்சாட்டினார்.

### எண்ணெய் நிறுவனங்களுக்குப் பயனளிக்கும் வகையில்

### கலால் வரியைக் குறைத்தது ஒன்றிய அரசு!

# பெட்ரோல் - டீசல் விலை மட்டும் குறையாதாம்!

புதுடெல்லி, மார்ச் 29 -

பெட்ரோல் டீசல் மீதான கலால் வரியை ஒன்றிய அரசு குறைத்துள்ளது. இருப்பினும் பெட்ரோல், டீசல் விலை குறையாது என தகவல் வெளியாகியுள்ளது.

வளைகுடா போரால் உலகம் முழுவதும் உள்ள எண்ணெய் நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்தியாவில் பாதிக்கப்பட்டுள்ள எண்ணெய் நிறுவனங்களுக்கு கலால் வரியை குறைத்து ஒன்றிய அரசு உத்தரவிட்டுள்ளது.

பெட்ரோல் மீதான கலால் வரி 13 ரூபாயிலிருந்து 3 ரூபாயாகவும், டீசல் மீதான கலால் வரி 10 ரூபாயிலிருந்து பூஜ்ஜியமாகவும் மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. கலால் வரி குறைக்கப் பட்டாலும், பெட்ரோல், டீசல் குறையாது என ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

சில்லறை விற்பனை மட்டத்தில் நுகர்வோருக்கு விலைக் குறைப்பு இல்லை என்று அவர் விளக்கம் அளித்துள்ளார். இதனால் பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.



கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி, செல்வபுரம் பகுதியில் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். இதில் தெலுங்குபாளையம் பகுதி கழக பொறுப்பாளர் ராஜ்குமார் உள்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உடனிருந்தனர்.